## இருநாட்டு மீனவர்கள் சந்திக்கும் ஆலோசனைக் கூட்டம்!

# ஒன்றிய அரசு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 3-

இந்தியா, இலங்கை இரு நாட்டு மீனவர்கள் சந்திக்கும் ஆலோசனைக் கூட்டத்தை கூட்ட ஒன்றிய அரசு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 2.11.2024 தேதிய ‘தினகரன்’ தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு, இலங்கை மீனவர்கள் பிரச்சினை என்பது ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இலங்கைக் கடற்படையினர் தாக்குதலால் நூற்றுக்கணக்கான தமிழ்நாட்டு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மீனவர்கள் உடல் ஊனப்படுத்தப்பட்டும், பலர் படகுகளை இழந்து தங்களது வாழ்வாதாரத்தை பறிகொடுத்தும் உள்ளனர். மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி பகுதிகளில் தொன்றுதொட்டு இருநாட்டு மீனவர்களும் மீன் பிடித்து வந்த நிலையில் சமீபகாலமாக இந்த பகுதிதான் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடக்கும் பகுதியாக மாறி உள்ளது.

கைது செய்யப்படும் தமிழ்நாடு மீனவர்களின் படகுகளை நாட்டுடமையாக்குதல், மீனவர்களுக்கு லட்சக்கணக்கில் அபராதம் விதித்தல், அபராதத்தை கட்டத் தவறினால் சிறை தண்டனை விதிப்பது அல்லது அபராதத்தையும், சிறை தண்டனையும் ஒரு சேர விதிப்பது என இலங்கை அரசு வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டங்களை கடுமையாக அமல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, சிறைபிடிப்பது, படகுகளை கைப்பற்றுவது, வலைகளை அறுப்பது போன்ற அத்துமீறல்களில் இலங்கைக் கடற்படை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

எனவே வெளிநாட்டு மீன்பிடி சட்டத்தை திரும்ப பெறக் கோரியும், மீனவர்களுக்கு அபராதம், சிறை தண்டனை வழங்குவதை கண்டித்தும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், மீனவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும் ஒன்றிய அரசை வலியுறுத்தி வரும் தமிழ்நாடு மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரை கண்டித்து போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். இந்த ஆண்டில்



தினகரன்

நவம்பர் 2, 2024 சனிக்கிழமை

மவுனம் கலையுமா?

தமிழ்நாடு, இலங்கை மீனவர்கள் பிரச்சினை என்பது ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இலங்கை கடற்படையினர் தாக்குதலால் நூற்றுக்கணக்கான தமிழ்நாட்டு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மீனவர்கள் உடல் ஊனப்படுத்தப்பட்டும், பலர் படகுகளை இழந்து தங்களது வாழ்வாதாரத்தை பறிகொடுத்தும் உள்ளனர். மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி பகுதிகளில் தொன்றுதொட்டு இரு நாட்டு மீனவர்களும் மீன் பிடித்து வந்த நிலையில் சமீபகாலமாக இந்த பகுதிதான் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடக்கும் பகுதியாக மாறி உள்ளது.

கைது செய்யப்படும் தமிழ்நாடு மீனவர்களின் படகுகளை நாட்டுடமையாக்குதல், மீனவர்களுக்கு லட்சக்கணக்கில் அபராதம் விதித்தல், அபராதத்தை கட்டத் தவறினால் சிறை தண்டனை விதிப்பது அல்லது அபராதத்தையும், சிறை தண்டனையும் ஒரு சேர விதிப்பது என இலங்கை அரசு வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டங்களை கடுமையாக அமல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு

மட்டும் ஜனவரி மாதம் முதல் அக்டோபர் வரை 10 மாதங்களில் இலங்கைக் கடற்படையினர் 62 தமிழ்நாட்டு மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்து, 462 மீனவர்களை கைது செய்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க ஒன்றிய அரசானது ஆக்கபூர்வமான திட்டங்கள் எதையும் முன்னெடுக்கவில்லை என்பதே தமிழ்நாடு மீனவர்களின் குற்றச்சாட்டாக உள்ளது. தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது தொடர்பாகவும், இதை தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்கக்கோரியும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய அரசுக்கு பலமுறை கடிதம் எழுதியுள்ளார். ஒவ்வொரு முறையும் பிரதமரை சந்திக்கும் போதும், தமிழ்நாடு மீனவர்கள் பிரச்சினை குறித்து வலியுறுத்த முதல்வர் தவறியதில்லை.

ஆனாலும் தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணாமலும், உறுதியான நடவடிக்கை எடுக்காமலும் ஒன்றிய அரசு மவுனம் காத்து வருவது மீனவர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இந்த சூழலில்தான் இருநாட்டு மீனவர்கள் கூட்டத்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணுவது தொடர்பாக சமீபத்தில் இலங்கை அதிபர் ஆலோசனை நடத்தி உள்ளார். இந்த கூட்டத்தில் இந்தியா, இலங்கை இரு நாட்டு மீனவர்களின் நீண்ட கால பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்தும் விரிவாக பேசப்பட்டுள்ளது.

இருநாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து பேசினால் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு எட்டப்பட வாய்ப்பு உள்ளதாக தமிழ்நாடு மீனவர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். எனவே இருநாட்டு மீனவர்கள் சந்திக்கும் ஆலோசனைக் கூட்டத்தை துரிதப்படுத்தவும், கூட்டத்தை நடத்த தேவையான ஏற்பாடுகளையும் ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது தமிழ்நாட்டு மீனவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. வழக்கம்போல ஒன்றிய அரசு மவுனம் காக்குமா? அல்லது தீர்வை நோக்கி அடியெடுத்து வைக்குமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் காங்கிரஸின் உண்மை முகம், மக்கள்முன் மிக மோசமாக அம்பலமாகி உள்ளது - என்று பிரதமர் சாடியுள்ளாரே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; நமது பிரதமர், தம்மீது சார்ந்துள்ள குறைகளை, எதிர்க்கட்சிகளின் மீது இட்டுக்கட்டிச் சுமத்துவதை வழக்கமாகக் கொண்டவர். ஒவ்வோராண்டும் 2 கோடிப் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன்; நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் வரவு வைப்பேன்; விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவேன்; - என்பன போன்ற இவர் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் மக்கள் மனதில் இன்றும் இருக்கின்றன; ஆனால் பிரதமர் மட்டும் என்றோ மறந்து விட்டாரே !**

**“கொடுத்தவனே பறித்துக் கொண்டானே” என்று வரும் திரைப்படப் பாடல் நினைவிருக்கிறதா ?**

## ஈரோடு தெற்கு

# மாவட்டக் கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து மறைவு!

## அமைச்சர் சு.முத்துசாமி - கழகத்தினர் நேரில் அஞ்சலி !

ஈரோடு, நவ.3-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து வயது78, நேற்று முன்தினம் (1.11.2024 - வெள்ளிக்கிழமை) இரவு 9.30 மணியளவில் வயது மூப்பின் காரணமாக அவரது இல்லத்தில் காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு குமார், முருகேசன் என இரு மகன்களும் அனிதா என்கிற ஒரு மகளும் உள்ளனர்.



அன்னாரின் மறைவு செய்தியறிந்த ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடல் நேற்று (2.11.2024-சனிக்கிழமை) மதியம் 12 மணியளவில் ஈரோடு காவிரி கரையில் உள்ள ஆத்மாவில் தகனம் செய்யப்பட்டது.

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழக - முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, நவ. 3–**

**ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து அவர்கள், நேற்று முன்தினம் (1.11.2024) வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். அவருக்கு வயது 78,**

**கொண்ட கொள்கையில் இருந்து கிஞ்சிற்றும் வழுவிடாது இறுதி வரை கழகப் பணியாற்றி வந்த கழக முன்னோடி முல்லை க.முத்து அவர்களின் மறைவுச் செய்தியறிந்து வருந்திய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.**




இங்கிலாந்து நாட்டில் பிர்மிங்காம் நகரின் ஹயத் ரெஜென்சி ஓட்டலில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் சுற்றுலா கவன ஈர்ப்பு ‘ரோட் ஷோ’ நிகழ்ச்சியை பிர்மிங்காம் நகரின் இந்தியத் தூதர் டாக்டர்.வெங்கடாசலம் முருகன் துவக்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர். பி.சந்திரமோகன் ஐ.ஏ.எஸ்., சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி. சமயமூர்த்தி, ஐ.ஏ.எஸ்., ஆகியோர் உடன் இருந்தனர்.

## நாமக்கல் கிழக்கு மாவட்டம் –

# சட்டமன்றத் தொகுதி வாரியாக BLA2 உட்பட நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!



தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க BLA 2 மற்றும் பூத் கமிட்டியை சரிபார்க்கும் பணியை மேற்கொள்ள முதற்கட்டமாக நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்கண்ட விவரப்படி BLA 2 உட்பட நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள், மாவட்ட தலைமைக்கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், BLA 2, வார்டு செயலாளர்கள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கிளை கழக பிரதிநிதிகள், கழகத்தின் முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தொகுதி கூட்டத்தில் தலைமைக் கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் மேற்பார்வையாளர்கள் பங்கு பெறுகிறார்கள்.

பொருள் : தலைமைக்கழக அறிவிப்பின்படி தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் வாரியாக BLA 2 மற்றும் BLC ஆய்வு கூட்டங்கள் ஊராட்சி, வார்டு வாரியாக கூட்டம் நடத்துவது சம்பந்தமாக

| | 05.11.2024 நிகழ்ச்சி விவரங்கள் | |
|---|---|---|
| நேரம் | இடம் | தொகுதி பார்வையாளர்கள் |
| 08.30 AM | ஐஸ்வர்யா மஹால், சேந்தமங்கலம். (சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி) | திருமதி. ஜே.ரேகா பிரியதர்ஷினி, மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர். |
| 11.00 AM | சுமங்கலி மஹால், லைன்ஸ் கிளப், இராசிபுரம். (இராசிபுரம் சட்டமன்ற தொகுதி) | நன்னியூர் ராஜேந்திரன், மாநில நெசவாளர் அணி தலைவர். |
| 12.30 PM | நளா ஹோட்டல் , திருச்சி ரோடு, நாமக்கல். (நாமக்கல் சட்டமன்ற தொகுதி) | திருமதி. முனைவர் ஜான், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர். |

**கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி.,**
நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர்,
தலைவர், நாமக்கல் மாவட்டமத்திய கூட்டுறவு வங்கி.

## நாகை மாவட்டத்தில்

# சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வாக்குச் சாவடி முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலோடு நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவுத்தலின்படி நாகை மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆலோசனைக்கூட்டம் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் உ.மதிவாணன், இரா.சங்கர், வி.ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

| நாள் | நேரம் | ஒன்றிய, நகர, பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 03.11.2024 | காலை 10.00 மணி | நாகை நகரம் | நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகம் |
| 03.11.2024 | காலை 11.30 மணி | நாகை வடக்கு ஒன்றியம் | நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகம் |
| 03.11.2024 | மாலை 4.00 மணி | நாகூர் நகரம் | நாகூர் நகர தி.மு.க. அலுவலகம் |
| 03.11.2024 | மாலை 5.00 மணி | திருமருகல் வடக்கு ஒன்றியம், திட்டச்சேரி பேரூர் | திருமருகல் வடக்கு ஒன்றிய தி.மு.க.அலுவலகம். |
| 05.11.2024 | காலை 8.00 மணி | திருமருகல் தெற்கு ஒன்றியம் | திருக்கண்ணபுரம் |
| 05.11.2024 | காலை 10.00 மணி | கீழ்வேளூர் வடக்கு - தெற்கு ஒன்றியம், மற்றும் கீழ்வேளூர் பேரூர் | கீழ்வேளூர் ஒன்றிய தி.மு.க. அலுவலகம் கீழ்வேளூர் |
| 05.11.2024 | காலை 11.00 மணி | கீழையூர் மேற்கு ஒன்றியம் | கடைத்தெரு திருக்குவளை |
| 05.11.2024 | மதியம் 3.00 மணி | நாகை தெற்கு ஒன்றியம் | நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகம் |
| 05.11.2024 | மாலை 5.00 மணி | கீழையூர் கிழக்கு ஒன்றியம் & வேளாங்கண்ணி பேரூர் | கலைஞர் அரங்கம், மெயின்ரோடு வேளாங்கண்ணி |
| 06.11.2024 | காலை 10.00 மணி | வேதாரண்யம் நகரம் | வேதாரண்யம் நகர தி.மு.க. அலுவலகம் |
| 06.11.2024 | காலை 11.00 மணி | வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் | திரௌபதி அம்மன் கோவில் அருகில் அண்டர்காடு |
| 06.11.2024 | மதியம் 3.00 மணி | வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் | வேதாரண்யம் மேற்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகம் அருகாமையில் |
| 06.11.2024 | மாலை 5.00 மணி | தலைஞாயிறு ஒன்றியம் மற்றும் தலைஞாயிறு பேரூர் | தலைஞாயிறு ஒன்றிய தி.மு.க. அலுவலகம் |

**என்.கௌதமன்**
செயலாளர்
நாகை மாவட்ட தி.மு.க.